**செ. கு. எண்**: 32 **நாள்**:29.01.2013

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை –29.1.2013

சென்னை மாவட்டம், புரசைவாக்கம் – பெரம்பூர் வட்டம், வெற்றி நகர், நாகம்மாள் தெருவில் வசித்து வரும் திரு. தண்டபாணி என்பவரின் மகன் செல்வன் விக்னேஷ்வரன் 25.1.2013 அன்று பெரியார் நகர் அரசு மருத்துவமனையின் நான்காவது தளத்திலிருந்து தவறி விழுந்ததில், பலத்த காயமடைந்து 27.1.2013 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இவ்விபத்தில் அகால மரணமடைந்த விக்னேஷ்வரன் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இத்துயரச் சம்பவத்தில் உயிரிழந்த விக்னேஷ்வரன் குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**